**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,VIRUDHUNAGAR DISTRICT AT SRIVILLIPUTTUR.

Calendar )
Preliminary Register) CC.149/2018
Sessions)

( Prosecution P.W.9
Deposition of witness for (Defence
(Court

Evidence recorded in through Video Conference. The Witness deposed from City Civil Court, High Court Campus, Chennai. The Co ordinator is Ms. Vishalatchi, Assistant Programmer.

| | | | |
|---|---|---|---|
| Name | கார்த்திகேயன் | -- | |
| Father's Name | சேதுராமலிங்கம் | Calling | வட்டார போக்குவரத்து அலுவலர் |
| Village | சென்னை | Religion | |
| Taluk | சென்னை | Age | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025.

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது வட்டார போக்குவரத்து அலுவலகராக சென்னை, தெற்கு அலுவலகத்தில் பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 19.06.2018 ம் தேதியன்று வட்டார போக்குவரத்து அலுவலகம், திருவில்லிபுத்தூரில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை–I ஆக பணியில் இருந்தபோது திருவில்லிபுத்தூர் காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்தின் படி குற்ற எண். 105/2018 என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட TN58AV1580 என்ற இருசக்கர வாகனத்தை என் அலுவலகத்தில் வைத்து மாலை 03.00 மணிக்கு ஆய்வு செய்தேன். ஆய்வின் போது 1. முன் பக்க வீல் மக்கார்டு சேதம் அடைந்து காணப்பட்டது. 2. முகப்பு விளக்கு வைசர் சேதமடைந்து காணப்பட்டது. 3. ஹேண்டில் பார் வலது புறம் வளைந்து காணப்பட்டது. 4. ஹேண்டில் பார் வலது புறம் லிவரின் பொருந்தும் பகுதி சேதமடைந்து காணப்பட்டது. 5. ரியர் வீல் மக்கார்டு சேதமடைந்து காணப்பட்டது. 6. சீட் லேசாக திரும்பி காணப்பட்டது. 7. ரியர் வீல் ஷார்க் அப்சர்வர் லேசாக வளைந்து காணப்பட்டது. 8. ரியர் பிரேக் லைட் மற்றும் இரண்டு திசைக்காட்டி விளக்குகளும் சேதமடைந்து காணப்பட்டது. 9. ரைட் சைடு வாகன ஓட்டுநர் கால் வைக்கும் பகுதி மற்றும் பிரேக் கால் தடை லிவர் வளைந்து காணப்பட்டது. 10. லெக் கார்டு வலது புறம் பின்னோக்கி வளைந்து காணப்பட்டது. 11. Fuel Tank வலது புறம் லேசாக அமுங்கியும், சேதமடைந்தும் காணப்பட்டது. 12. Fork லேசாக வளைந்து காணப்பட்டது. வாகனம் இயக்கி பார்க்ககூடிய நிலையில் இல்லாத காரணத்தினால்

நிலை ஆய்வில் கால் தடை மற்றும் கைத் தடை திறன் நல்ல நிலையில் இருந்தது. இந்த விபத்து இயந்திரக் கோளாறினால் ஏற்படவில்லை என்று என்னால் சான்றளிக்கப்பட்டது. மேற்படி சான்றிதழ் **அ.சா.ஆ.7** ஆகும்.

அதே வழக்கில் சம்மந்தப்பட்ட மற்றொரு வாகனமான TN67AQ2518 என்ற பதிவெண் கொண்ட இலகு ரக ட்ராக்டர் வாகனத்தை 22.06.2018 அன்று மதியம் 02.00 மணிக்கு என் அலுவலகத்தில் ஆய்வு செய்தேன். ஆய்வின் போது வாகனத்தில் சேதம் எதுவும் இல்லை. கால் தடைத்திறன் 64 % இருந்தது, கைத்தடைத்திறன் நன்றாக வேலை செய்தது. இந்த விபத்து இயந்திரக் கோளாறினால் ஏற்படவில்லை என்று நான் சான்றளிக்கிறேன். மேற்படி சான்றிதழ் **அ.சா.ஆ.8** ஆகும்.

**குறுக்கு விசாரணை**

பொதுவாக வாகன விபத்து ஏற்பட்டால் அதில் சம்மந்தப்பட்ட இரண்டு வாகனங்களுக்கும் சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் கனரக வாகனமாக இருந்தால் போகும் வேகத்தைப் பொறுத்து சேதாரம் ஏற்பட வாய்ப்புள்ளது. கனரக வாகனமாக இருந்தாலும் அந்த வாகனத்திற்கும் சிறிய அளவிலாவது சேதம் ஏற்பட்டிருக்கும். நான் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ட்ராக்டருக்கு சேதம் ஏதும் இல்லை என்று சான்றளித்துள்ளேன். இருசக்கர வாகனம் வேகமாக சென்று சறுக்கி விழுந்தால் இது போன்ற சேதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

மறு விசாரணை இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 10th day of November 2025.

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

**Chief Judicial Magistrate,**
**Virudhunagar District at**
**Srivilliputtur.**